தரத்தில் சிறந்த
நவீனமான
பெருட்களை
நிதான விலையில்
பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய இடம்
லக்கி பிளாஸா
67,68, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.
தொலைபேசி, 23509.

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ.1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

லக்கி பிளாஸா
* பேபி ஐயிட்டம்,
* மின்சார மனையியற் பொருட்கள்
மற்றும் அன்றாடப்புப் பொருட்களை
நிதான விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.
67 68, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.
தொலைபேசி, 23509

கடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ரு புரட்டாதி மீ 24 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 5 (10-10-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 277

இலங்கை அடக்குமுறையைக் கண்டித்து

சுவீடனில் ஈழத் தமிழர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

அந்த நாட்டு பிரசைகளும் கலந்து கொண்டு கோஷமிட்டனர்

ஸ்டொக்ஹோம், அக்டோபர் 9

இலங்கையில் தமிழருக்கு எதிராக இடம்பெறும் அடக்குமுறை, மனித உரிமை மீறல் சம்பவங்களைக் கண்டித்து சுவீடன் தலைநகரில் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை அங்கு வாழும் தமிழர்கள் நடத்தினர்கள்.

தமிழர்கள் ஒழுங்குசெய்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சுமார் ஆயிரம் சுவீடிஸ் பிரசைகளும் கலந்துகொண்டு கோஷங்களை எழுப்பினர்.

தமிழருக்கு எதிரான மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. அடக்குமுறைச் சம்பவங்களுக்கு அவர்கள் ஆளாகின்றனர்.

இப்பகு எழுதப்பட்ட சுலோகங்களை ஊர்வலத்தில் பங்குபற்றியோர் ஏந்திச் சென்றனர்.

ஊர்வலத்தின் முடிவில் சுவீடனில் உள்ள இலங்கைத் தூதரகம் கண்டனம் ஒன்று ஊர்வலத்தில் சென்றவர்கள் சார்பில் பிரதிநிதிகள் குழு ஒன்று கையளித்தது.

இந்த ஊர்வலம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (அ-ஐ-எ)

கோட்டை சிப்பாய்கள் போராளிகளிடம் இப்படியும் வேண்டுகோள்!

யாழ்ப்பாணம், அக்டோபர் 10

சராயப் போத்தல்கள், பிளாஸ்ரிக் ரூல்கள், சாப்பாட்டுப் பெருட்கள் போன்றவற்றை எமக்கு உடன் அனுப்பி வையுங்கள்.

நேற்று கோட்டை முகாமில் இருந்து 'புளொட்' போராளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்ததாம்.

சிங்களத்திலே இக்கடிதம் எழுதப்பட்டிருந்தது.

கொடுத்து எமக்கு வரும் பொருட்களை நீங்கள் பதிமுறைச் செய்யாதீர்கள்

எனவே நீங்களாகவே இனிமேல் இப்பொருட்களை வாங்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

இவ்வாறு சிப்பாய்களின் கடிதத்திலே மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது என்று அறியப்படுகிறது. (உ-10)

வல்வை மீனவர்கள் தாக்கப்பட்டனர்

வல்வெட்டித்துறை, அக். 10

நேற்றுக் காலை வல்வெட்டித்துறைக் கடலில் இரு ட்ரோலர்களில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் அரச படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

விசைப் படகுகளில் வந்த அரசபடையினர் திடீரென ட்ரோலர்களைச் சுற்றிவளைத்தனர்.

ட்ரோலர்களில் இருந்த மீனவர்கள் பெல்ட்டினாலும், நைலோன் கயிறுகளினாலும் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

கடலில் மீனவர்கள் மீன் பிடிக்கக் கூடாது என்றும்—

மீறி கடலில் நடமாடும் மீனவர்கள் சுட்டுக்கொல்லப்படுவர் என்றும் படையினர் எச்சரித்தனராம்.

காயங்களுடன் கரை திரும்பிய மீனவர்கள் வல்வைப் பிரசைகள் ஒழுங்குபடுத்தினர் திரு. கே. ச. திருநாவுக்கரசிடம் இந்தச் சம்பவம் குறித்து முறையிட்டனர். (உ-160)

சுபநேரம்

10—10—1986
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6 02 முதல் 7 32 வரை

ராகுகாலம்:
10 32 முதல் 12 02வரை

இன்று பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

மலையக ஆசிரியர்களின் போருக்கு ஆதரவு தருக

மாணவர் மன்றம் அறைகூவல்

யாழ்ப்பாணம், அக். 10

மலையகத்தில் வைத்து செய்யப்பட்ட தமிழ் ஆசிரியைகளை விடுவிக்கும்படி மலையகத் தமிழர்கள் நடத்தும் போராட்டத்துக்கு ஈழப்பகுதியில் வாழும் ஏனைய மாணவர்களும் பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

இப்படி மாணவர் இணைஞர் பொதுமன்றம் (Guys) அறைகூவல் விடுத்துள்ளது

மாணவர் இணைஞர் பொது மன்றம் விடுத்த அறிக்கை வருமாறு:

இலங்கையில் கல்வித் (4ஆம் பக்கம் பார்க்க)

புளொட் போராளிகளுக்கு விடுவிக்கப்பட்டது:

மோதத் துணிவிருந்தால் நேரடி மோதலுக்கு வாருங்கள்

சிப்பாய்களின் சவால்

யாழ்ப்பாணம், அக் 10

எமுடன் மோதத் துணிவு இருந்தால் கொலிஸ் நிலையம் பக்கமாக வாருங்கள்

—நேற்று புளொட் போராளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த மற்றொரு கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

நட்டக்க செய்யப்பட்ட இக்கடிதம் முகாம் வொறுப்பதிகாரி ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பவே வேண்டியவர் ஒருவர் மூலம் மேற்படி போராளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

நாம் உங்களுடன் மோதத் தயாராக இருக்கிறோம் நீங்களும் எமுடன் மோதத் தயாராகுக நேரடி மோதலுக்கு வாருங்கள்— என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருந்தது

இப்படி தெரிவிக்கப்பட்டிருந்த அந்தக் கடிதத்தில் பகல் 2 மணிக்கு (அதாவது நேற்று பி ப-2 மணிக்கு) நாம் வெளியே வரவிருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாம்

இதனையடுத்துப் போராளிகள் கவசார் நிலையில் இருந்தனராயினும் சிப்பாய்கள் வெளியே வரவில்லை

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

* பொதுச் சமயத் நிற்குள் இந்த சமயத்திற்கும் உள்ள வேறுபாடு மிகவும் சிறியது. ஆனால் நாங்கள் உங்கள்மீது கருணை காட்டுகின்றோம்.
* சாதாரண மனிதனைச் கடுவது கோழைத்தனம். அதனால் சாதாரண மனிதனை விடு (4ஆம் பக்கம் பார்க்க)

மாகாண சபைகளை ஏற்காத

தமிழ் அமைப்புகள் மீது இராணுவ நடவடிக்கை

ஜனாதிபதி பேச்சு

கொழும்பு, அக். 10

பெரும்பாலான தமிழர் அமைப்புக்கள் மாகாணசபைத் திட்டத்தை ஏற்று அமுல் நடத்த முன் வந்தால் ஏற்காத அமைப்புக்களின் மீது அரசு இராணுவ நடவடிக்கை எடுக்கும்

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா நுகேகொடையில் நேற்று மாலை நடந்த பொதுக் கூட்டத்தில் தெரிவித்தார்

திரு ஜெயவர்த்தனா மேலும் சொன்னதாவது:

இந்தியா, தமிழ்நாடு, கூட்டணி, போராளி அமைப்புக்கள் ஆதரவு தந்தால் மாகாணசபை வேலைகளை அமுல் நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவோம்.

சில தீவிரவாத அமைப் (4ஆம் பக்கம் பார்க்க)

போர் நிதிக்கான சுவீப் டிக்கற் விற்பனை இன்று மாலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக் 10

தமிழ்ஈழ இராணுவத்திற்கு போர் நிதிக்கான மாதாந்த அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பு (லொத்தர்) இன்று மாலை 5-45 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்

தமிழீழம் போர் நிதி அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தமிழர்களால் எடுத்துச் சென்றுகொண்டிருக்கும் தமிழீழ இலட்சியத்தை அடையப் பயன்படுத்தப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது

முதலாவது அதிர்ஷ்டலாபச் சீட்டு கிறியாமஸ்ராக்வி வீதி ஸ்ரீதர் திரையரங்குக்கு அருகாமையிலுள்ள காரியாலயத்தில் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

கனடா தூதரகம் கருத்துத் தெரிவிக்க மறுப்பு

கொழும்பு, அக் 10

கனடாவில் உள்ள இலங்கைத் தூதரகத்து எதிரான புதிய மனித உரிமைமீறல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க இருப்பதாக கனடா அறிவித்து இருக்கிறது அல்லவா?

இதுகுறித்து இலங்கை அரசு வட்டாரங்களும் பத்திரிகைகளும் கண்டனம் தெரிவித்து வருவது பற்றிக் கருத்து எதுவும் தெரிவிக்க கொழும்பில் உள்ள கனடா தூதரகம் மறுத்து விட்டது.

'கனடாவின் விசா' — என்ற தலைப்பில் கொழும்பு ஆங்கில நாளிதழ் 'தி ஐலண்ட்' நேற்று எழுதிய ஆசிரியர் தலையங்கம் குறித்து கொழும் (4ஆம் பக்கம் பார்க்க)

போராளிகளின் காவல் அரண்களை படம் பிடிக்க முயற்சி

யாழ்ப்பாணம், அக்.10

கோட்டைக்கு அண்மையில் உள்ள போராளிகளின் காவல் அரண்களை படையினர் ஹெலிக் கொப்டரில் இருந்து படம்பிடிக்க முற்பட்டபோது 'புளொட்' போராளிகள் ஹெலிக் கொப்டரை நோக்கித் தாக்குதல் நடத்தினர்.

நேற்றுக் காலை எட்டு மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

பலாலி பக்கமாக இருந்து பறந்துவந்த ஹெலிக் கொப்டர் ஒன்று திடீரென போராளிகளின் காவல் அரண்களைச் சுற்றி வட்டமிட்டதாம்.

அதை திறந்த நிலையில் பறந்த இந்த ஹெலிக் கொப்டரில் 'கமராவுடன்' சிப்பாய்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து சந்தேகம் கொண்ட போராளிகள் ஹெலிக்கொப்டர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

துப்பாக்கிச் சூட்டினை அடுத்து உயரப் பறந்த ஹெலிக்கொப்டரிலிருந்து சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். (உ-10)

யாழ் கலாசார பேரவையின்

நாதஸ்வர, தவில்பயிற்சி வகுப்பு ஞாயிறு ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 10

யாழ் கலாசார பேரவையின் ஆதரவிலான நாதஸ்வர, தவில் பயிற்சி வகுப்பு ஆரம்ப விழா எதிர்வரும் ஞாயிறு காலை 10 மணிக்கு விஜயதசமி தினத்தன்று தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெறும்

கலாசார பேரவைத் தலைவரும் யாழ் அரச அதிபருமான திரு வை. மு. ஞானலிங்கம் தலைமை வகிப்பார்.

சமத்து நாதஸ்வர, தவில் முதல்நிலை வகுப்புகளை ஆரம்பித்து வைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக சிவத்தமிழ்ச் செல்வி தங்கமாலதி பாக்குட்டி, நாதஸ்வரக் கலாநிதி எம். கே. பத்மநாதன், தவில் வித்துவான் வீ. ஆர் சின்னராசா ஆகியோர் கலந்து (4ஆம் பக்கம் பார்க்க)

ஈடிவிரோதமாக நுழைய முயன்ற தமிழ் இளைஞனுக்கு பிரான்ஸில் சிறை!

பாரிஸ், அக். 9

மேற்கு ஜேர்மனியில் இருந்து பிரான்ஸிலுக்கு சட்டவிரோதமாக நுழைய முயன்ற 7 இலங்கைத் தமிழ் இளைஞர்களில் ஒருவருக்கு பிரான்ஸ் நீதிமன்றம் ஒன்று ஒரு வருடச் சிறைத் தண்டனை விதித்தது

காரில் சாரதியும் அதன் சொந்தக்காரருமான 29 வயதான இலங்கைத் தமிழ் இளைஞனுக்கு ஆறுமாத கால ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது

ஏனைய 5 தமிழ் இளைஞர்களுக்கு மேற்கு ஜேர்மனி குத்திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர் (உ-ஐ-எ)

தமிழர்களுக்கு தனி மாகாணம் கூட்டணியின் பிந்திய நிலை இதுவே

செக்ஸ், அக். 9

இலங்கையில் தமிழருக்கு ஒரு தனி மாகாணம் ஒன்று அமைக்கப்படவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கண்ட இறுதி நிலையை இந்திய அரசுக்கு அறிவித்துள்ளது.

அந்தத் தமிழ் மாகாணத்தின் எல்லைகளை நிர்ணயிக்க தமிழர் நிபுணர்கள் வேண்டும் என்ற இலங்கை அரசின் யோசனையையும் தமிழர் விடுதலைக் கூட்டணி மீண்டும் நிராகரித்து விட்டது.

செக்ஸ் வந்து மேலும் பேச்சுக்கள் நடத்திய இந்திய அரசமைப்புச் சட்ட நிபுணர் திரு பாலகிருஷ்ணன் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது மேற்கண்ட இறுதி நிலையைக் கூறும் தந்தாவே ஏற்றுக்கொண்டிருந்தது

அந்தத் தந்தாவேஜை கடந்தகால அரசமைப்புச் சட்டநிபுணர் திரு. பாலகிருஷ்ணன் புதுடில்லி திரும்பினார்.

எம். ஜி ஆர்- பிரபா சந்திப்பு

இதனிடையே தமிழக முதலமைச்சர் திரு எம் ஜி இராமச்சந்திரனை கடந்த திங்கள் அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு பிரபாகரன் சந்தித்துப் பேசினார் என்று செக்ஸ் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதன் பின்னர் தான் திரு. இராமச்சந்திரன் புதுடில்லி சென்றார்.

ஏனைய இயக்கத் தலைவர்களை முதலமைச்சர் சந்தித்தாரா இல்லையா என்பது குறித்த தகவல் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

அறிவித்தல்
(பெயர் மாற்றம்)
கடந்த பல காலங்களாக
INTERSUN GROUP
என்ற பெயரில் பிரயாண ஒழுங்குகளை மேற்கொண்டுவந்த எமது ஸ்தாபனம்
8-10-86 (புதன்கிழமை)
தொடக்கம்
GLORIA TRAVELS
என்ற புதிய பெயருடன் இயங்கும் என்பதை சகலருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

முச்சந்தி மூளி

இப்பவும் தமிழப் போராளிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்திடுமோ என்று சொல்லித்தானே அப்பாவி மக்களைக் கொண்டு குவிக்கினம்... ..! புதிசா என்னத்தைச் செய்யப்போறாம் . . . ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

பகிரங்க ஏல விற்பனை

கனரகப் பொருட்கள் பகிரங்க ஏல விற்பனையில் பல்வேறு கொள்ளத் தகுதிகள் தனியார் நிறுவனம் ஒன்றையே அமைக்கக் கூடிய சமவிதமான இரும்புப் பொருட்கள், வர்ணப் பூச்சுகள் கொண்ட கோமிக்கோ சீற் எஸ்னோ வைப் நிலைப்புக்கள் யாவும் உண்டு.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பியவர்கள் வேலை நாட்களில் முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை பார்வையிடலாம்.

இடம்:- யாழ் ப.நோ.கூ.சங்க இரும்புக் கிளை 269 291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

திகதி:- 1986.10.25 (ஏலவிற்பனை நடைபெறும் திகதி)

பொது முகாமையாளர்.
யாழ் ப.நோ.கூ.சங்கம்,
259, விக்டோரா நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

GLORIA TRAVELS

● கனடா ● டென்மார்க்
● பிரான்ஸ் ● ஜெர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

டென்மார்க், கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும்
பாஸ்போர்ட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

யாழ்ப்பாணம்
அபிவிருத்திச் சபையின்

கேள்வி அறிவித்தல் - 1987

யாழ்ப்பாண அபிவிருத்திச் சபை அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை 1987ஆம் ஆண்டு தைமாதம் 1ஆம் திகதி தொடக்கம் 1987ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ந் திகதி வரை குத்தகைக்கு வாடகைக்கு விற்பனை செய்வதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 22.10.86ம் திகதி நண்பகல் 12.00 மணி வரை யாழ் அபி சபை செயலாளரால் ஏற்றுக் கொள்ளப்படும். இயற்றிற்றுரிய கேள்விப் பத்திரங்கள் உரிய தொகையைச் செலுத்திய பின்னர் அவ்வவ் உப அலுவலகங்களால் 21.10.86ந் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும். மூலப்பிரதி யாழ் அபி. சபை தலைமை அலுவலகத்திலும், இணைப் பிரதி உரிய அலுவலகத்திலும் 22.10.86ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் பற்றிய ஏனைய விபரங்களையும் கேள்விப்பத்திர பெறுமதி, கேள்விப் பிணைத் தொகை ஆகிய விபரங்களையும் கீழ்க்காணும் உப அலுவலகங்களில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வை. மு. பஞ்சலிங்கம்
செயலாளர்,
யாழ்ப்பாணம்
அபிவிருத்திச் சபை.

யாழ். அபி. சபை
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1986-10-01.

உப அலுவலகங்களின் பெயர்

01. ஊர்காவற்றுறை
02. மானிப்பாய் பட்டினம்
03. உரும்பராய்-ஊரெழு
04. உடுப்பிட்டி
05 நாரந்தனை
06 மல்லாகம்
07. மானிப்பாய் கிராமம்
08 ஏழாலை
09 உடுவில்
10 சோப்பாய்
11 அளவெட்டி
12 நெடுந்தீவு
13. வேலணை
14. எழுவைதீவு
15. காரைநகர் வடக்கு
16 அராலி
17 காரைநகர் தெற்கு
18 கட்டைவேலி
19. குடத்தனை
20. நாவற்குழி
21 முள்ளிப்பற்று
22. இரணைதீவு
23 புலோலி
24. சங்கானை
25. பண்டத்தரிப்பு பட்டினம்
26 காங்கேசன்துறை
27. சுன்னாகம்
28 நெல்லியடி
29 விளிநொச்சி
30. கொக்குவில்
31 நல்லூர்
32. தெல்லிப்பளை
33. பயிலிட்டி
34 அச்சுவேலி
35 நீர்வேலி
36 சுழிபுரம்
37 புலோப்பளை
38. நவிலுதீவு
39. கீடுகோட்டை
40. மண்டைதீவு
41. அல்லைப்பிட்டி
42 புங்குடுதீவு
43 பண்டத்தரிப்பு கிராமம்
44. புத்தூர்
45. செம்பியன்பற்று
46. கச்சாய்
47. காரைநகர்
48 மிருசுவில்
49. வரணி
50 சாவகச்சேரி
51. பூநகரி
52. பளைராகன் கட்டு
53. சுன்னாகம்
54. முகமாலை.

மேட்டுப் பயிர்ச் செய்கையில் தமிழ் அகதிக் குடும்பங்கள்

புனர்வாழ்வுக் கழகம் திட்டம்

யாழ்ப்பாணம், அக்.10

முல்லைத்தீவு மாவட்டத்தில் தஞ்சம் புகுந்துள்ள சுமார் 1,200 தமிழ் அகதிக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பெரும் பிரச்சனையில் மேட்டுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தப்படும்.

இதற்கான திட்டம் ஒன்றைச் செயல்படுத்த தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் முன் வந்துள்ளது

கழகத்தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி நேற்று முன் தினம் தலைமை சந்தித்துப் பேசிய முல்லைத்தீவு மாவட்டத் தூதுக்குழுவிடம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இத்தூதுக்குழுவில் முள்ளியவளை பிரசைகள் குழுத்தலைவர் திரு சே. நியாசராஜா கொக்குளாய் பிரசைகள் குழுத் தலைவர் திரு க. ஞானரேசன், நிரிவாய் அகதிகள் சங்கத்தலைவர் திரு க. செல்வராசா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

தூதுக்குழுவின் வேண்டுகோளை ஏற்ற அகதிகள் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் திட்டம் ஒன்றுக்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஒப்புக் கொண்டது

இத்திட்டத்தின் கீழ் நிலக்கடலை பயிரிடப்படும் உழவு, விதை, உரம் கிருமிநாசினி ஆகியவற்றை தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் பொறுப்பேற்கிறது ஒரு ஏக்கருக்கு 1,600ரூபா இச்செலவாக வருகிறது

சுமார் ஆயிரம் ஏக்கரில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

"தண்ணீருற்று, முள்ளியவளை, அளம்பில், குமுழமுனை, புதுக்குடியிருப்பு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் இச் செய்கை மேற்கொள்ளப்படும்.

நிரியாவைச் சேர்ந்த 450 குடும்பங்கள், கொக்குளாயைச் சேர்ந்த 215 குடும்பங்கள். தென்னவரவாடியைச் சேர்ந்த 170 குடும்பங்கள் கொக்குத் தொடுவாய் கற்றாட்டுக்கேணி ராமன் கண்டியைச் சேர்ந்த 400ரும் பங்கு வரையில் இத்திட்டத்தின் கீழ் பயனடையும்.

4 பேர் கொண்டகுடும்பத்துக்கு அரை ஏக்கர் விதமும் 5 பேருக்குமேல் உள்ள குடும்பத்துக்கு ஒரு ஏக்கர் விதமும் காணி ஒதுக்கப்படும்

இத்தகவல்களை தூதுக் குழுவினர் உதயனுக்குத் தெரிவித்தனர். (இ-எ)

தென் இலங்கையில் உஷார் உத்தரவு

இறுநூறுக்கும் அதிகமான ஜே. வி. பி. உறுப்பினர் கைது

கொழும்பு, அக்.10

பாதுகாப்பு நடவடிக்கைகளை தென் இலங்கையில் தீவிரப்படுத்தி உஷார் நிலையில் இருக்கும்படி பிராந்திய பொலீஸ் அதிபர்களை பொலீஸ் தலைமைக் காரியாலயம் பணித்து உள்ளது.

இது சம்பந்தமான உத்தரவுகள் பிராந்திய பொலீஸ் அதிபர்களுக்கு செவ்வாய்க்கிழமை அனுப்பி வைக்கப்பட்டன

பெரிய அளவில் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல் கிடைத்திருப்பதாலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன

ஏற்கனவே 800 க்கு அதிகமான மக்கள் விடுதலை முன்னணியின் தீவிர உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன (இ-எ)

விளையாட்டரங்கு

உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள்

யாழ்ப்பாணம், அக்.10

புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் 23 ஆவது உதைபந்தாட்டச் கற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறும்.

சனிக்கிழமை 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் யாழ் முனை வீக் அணியை எதிர்த்து ஊரெழு ரோயல் கழக அணியும்—

ஞாயிற்றுக்கிழமை 11 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் ரோயல் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியும் மோதுகின்றன.

இப்போட்டிகள் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும். (உ)

உரும்பராயில் கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், அக்.10

உரும்பிராய் ஜே. சி. சி. லிமிட்டெட் ஆதரவில் உரும்பராய் விளையாட்டுக் கழகம் நடாத்தும் கரப்பந்தாட்ட (ஓவர் கேம்) வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளை மின்னொளியில் நடத்த உள்ளது

இது தொடர்பான விண்ணப்பங்கள் விளையாட்டுக் கழகங்களில் இருந்து கோரப்படுகின்றன

விண்ணப்ப முடிவு திகதி 24-10-86

திரு சி. சிவதாசன் உரும்பராய் விளையாட்டுக் கழகம் என்ற விலாசத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பும்படி போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் கோரப்படுகின்றனர் (இ)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

வாகனேரியில் கைதான 17 விவசாயிகள்பற்றி இன்னும் தகவல் இல்லை

மட்டக்களப்பு, அக்.10

மட்டக்களப்பு வாகனேரி, பட்டிருப்பு மடு என்னுமிடத்தில் ஆயுதபடையினரால் கைது செய்யப்பட்டு தகவல் பெற முடியாத தமிழ் விவசாயிகளின் தகவல்கள் பெறுவதில் பிரசைகள் ஒழு தீவிரமாக ஈடுபட்டுள்ளது

வயல் அறுவடை முடிந்து ஒய்வு எடுத்துக் கொண்டிருக்கையில்வாகனேரி இராணுவத்தினரால் மேற்படி 17 விவசாயிகளும் அழைத்துச் செல்லப்பட்டனர்கள்.

மறுநாள் உறவினர்கள் தகவல் பெற முதல் சென்ற சமயம் தாங்கள் அழைத்து செல்லப்பட்டனர் என தெரிவித்தனர் அடுத்தே பிரசைகள் குழுவிடம் புகார் செய்யப்பட்டது

மேற்படி 17பேரில் 14 பேரின் பெயர் விவரங்கள் பிரசைகள் குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பெயர் விவரங்கள் வருமாறு:

1- மு. குணரத்தினம், (30வயது)பரிச்சகம் அலுவலகர், 2- க. கடிவேல்(32வயது). 3- நா. பேரானந்தம் (20 வயது) 4- க. பிள்ளையான் (30வயது), 5-பி. கப்பிரமணியம் (25வயது), 6- காளிமுத்து (46வயது), 7- க. சீனித்தம்பி (31 வயது), 8- மா. நடராசன் (30வயது), 9- பொ. தங்கவேல் (18வயது), 10- பொ. இராசதுரை. (23 வயது) (இருவரும் சகோதரர்கள்), 11- அ. சோமநாதன் (34வயது) 12- அ. ராமநாதன், (30 வயது). (இருவரும் சகோதரர்கள்) 13- சே. விநாயகம் (33 வயது) 14- க. தேவநாயகம் (30 வயது).

இந்த 17 பேரும் கைது செய்யப்பட்ட மறுநாள் வாகனேரியில் 17 தீவிர வாதிகள் கொல்லப்பட்டனர் என்று அரசு அறிக்கை தெரிவித்தது

இந்நிலையில் கைதான விவசாயிகள் தான் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என உறவினர் தமது புகாரில் தெரிவித்துள்ளனர். (இ-21)

சமத்தின் தமிழ் இதயங்களுக்கு ஓர் இனிமையான செய்தி!

ரெலிபோன்-ரெலக்ஸ் சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அன்னாரிசைகளில் அழைத்து கூடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்

மைக்ரோ கொம்யூனிக்கேசன்
ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருட கால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்கி வருகின்றார்கள்.

உங்கள் தேவையே எங்கள் சேவை

மைக்ரோ கொம்யூனிக்கேசன்
கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

● டென்மார்க்
● ஜேர்மனி
● லண்டன்
● கனடா
● அவுஸ்திரேலியா

நம்பிக்கை வாய்ந்த பயணம்

உடனடியாக

தாமதமின்றித் தொடர்பு கொள்க.

யாழ்.-கொழும்பு விமான சேவை
வாரலிக்கு விசேட போக்குவரத்து வசதியுடன்
ஒழுங்காக நடைபெறுகிறது
உங்கள் ஆசனங்களைப் பதிவு செய்க

தாதி வேலையில் 5 வருட அனுபவமுள்ளவர்கள் எம்முடன் உடன் தொடர்புகொள்ளவும்

எங்கள் சேவைகள்:

* எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்
* துரிதமான பாஸ்போர்ட், விசா, பொண்ட் ஒழுங்குகள்
* CONFIRMATIONS, RE-CONFIRMATIONS & CANCELLATIONS
* இந்தியன் பயணத்தில் விசேட வசதிகள்

ரெலிபோன் - ரெலெக்ஸ்
முதல் தரமான சேவை
Open 24 Hours

Mack Communications & Travels
இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele:- 24791, 24836

பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி
● குவைத்
● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்றவார பயணங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார். இதுவரை எமது பல பயணிகள் வெற்றிகரமாகவும் விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது

ஜேர்மனிக்குச் செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள், மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

குவைத்துக்கு Airport Cleaners (ஏயர்போர்ட் கிளினர்ஸ்) ஆக செல்ல விரும்புபவர்கள் நேரடியாக பாஸ்போர்ட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவிற்கு வீடு அமைப்புக்கு விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போர்ட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

பஸ் இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில்
கிழக்கு

தொடர்பு!
N. பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில்
கிழக்கு.

* உங்கள் நன்மை கருதி நீங்கள் பகுதியில் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் வர்ணவளைவுடன் சந்தியில் அமைந்துள்ளது
* குடியேறிகள் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

நாவம் செய்ய ஏவுகிறவன், செய்கிறவனோடு சமமாகத் தண்டிக்கப்படுவான். — நாவலர்

உதயன்

உண்மை – நிதர்சனம் – துணிவு

இல. 15 வேலு ஒழுங்கை விக்டோரா நிலையம் யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

10-10-1986 த. பெ. இல. 23

முதற் செய்ய வேண்டியது

மாதுவு என்பது வவுனியா மாவட்டத்தில் உள்ள ஒரு சிங்களக் கிராமம். அங்கு அண்மையில் நடந்த அரசபயங்கரவாதங்களைத் தொடர்ந்து அங்கிருந்த சிங்கள மக்களை அரசாங்கத்தினர்— அதன் அதிகாரிகள் வவுனியா நகரத்துக்கு அழைத்துவர முயலுகிறார்கள்.

சிங்களக் கிராம வாசிகளின் பாதுகாப்புக் கருதி ஆயுதப்படைச் சிப்பாய்கள், அவர்களை அழைத்து வந்தனர் என்று தமது மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு உடனுக்குடன் அனுப்பி அவர்களுக்கு உயிரபாயத்தோ அல்லது வேறுவித கஷ்டங்களோ ஏற்படாது தடுப்பதில் அரசாங்கத்துக்கு— சிங்கள அரசாங்கத்துக்கு— இருக்கும் அக்கறையை எவரும் குறை கூறுவதற்கு இடமில்லை.

இந்த நாடு சிங்கள நாடு மக்கள் சிங்களவர். அரசு சிங்கள அரசு அதனால் சிங்கள மக்களுக்குத்தான் சகல வசதிகளையும்; வாய்ப்புக்களையும் செய்து கொடுக்க வேண்டும். ஏனைய இன மக்கள் மக்களல்லர். குறிப்பாகத் தமிழ் மக்கள் இந்த நாட்டுப் பிரசைகள் அல்லர் அவர்கள் அடிமைகள். இந்த வகையான எண்ணத்தோடும், உணர்வோடுந்தான் இப்போது இந்த நாட்டில் காரியங்கள் நடந்து வருகின்றன அது எல்லோருக்கும் தெரிந்த விடயம்;

ஆகவே சிங்கள மக்களை ஆயுதப்படையினர் பாதுகாப்பான இடத்துக்குக் கூட்டி வந்தது குறிப்பிட்டுக் குறை காணும் சம்பவமாக இல்லை

ஆனால் மாமடுவைச் சிங்கள மக்களுக்கும் பாதுகாப்பாக வந்த சிப்பாய்கள் திரும்பிச்செல்லும்போது அப்பாவித் தமிழ் மக்களைத் தாக்கியிருக்கிறார்கள்.

"காரணம் இல்லாமல் ஏன் தாக்குகிறீர்கள். நாங்கள் எதுவுமே செய்யவில்லையே" என்று அப்பாவித் தமிழர்கள் கேட்டபோது சிப்பாய்கள் தெரிவித்ததாகக் கூறப்படும் பதில் கொடியதாகும்

"நீங்கள் தமிழர்கள் அல்லவா? அதனால் தாக்குகிறோம்." என்று கூறினார்களாம்!

சிங்களவர்கள் காக்கப்படவேண்டியவர்கள். தமிழர்கள் தாக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் போராளிகளாக இருக்க வேண்டும் என்பதில்லை. சாதாரண—அப்பாவித் தமிழராக இருந்தாலும், தமிழர் என்பதால் அவர்களைத் தாக்க வேண்டும். இம்சிக்க வேண்டும்; இத்திரவதை செய்ய வேண்டும்; கொல்ல வேண்டும்.

இப்படியான ஒரு நோக்கத்துடன்தான் ஆயுதப்படைகள் சேவை புரிகின்றன என்பதற்கு வவுனியாச் சம்பவம் நல்ல எடுத்துக்காட்டு

தமிழ்ப் பகுதிகளில் இராணுவம் ஏன் என்று கேட்கிறார்கள். பொலீஸ் இயங்க முடியாத நிலை உருவாக்கப்பட்டதால்தான் இராணுவம் அனுப்பப்பட்டது. தமிழ்ப் பகுதிகளில் இலங்கையின் ஆயுதப் படைகள் தேவையில்லை என்றால் வேறு ஒரு நாட்டைக் கருவாக்கி விட்டதாகவும், அந்த நாட்டில் வாழ்வதாகவும் ஒரு நினைப்போ?

இவ்வாறு தமிழர்களைப் பார்த்துக் கேள்விக்கணை தொடுக்கும் சிங்கள அரசியல் வாதிகளுக்கும் சிங்களப் பேரினவாதிகளுக்கும் வவுனியாச் சம்பவத்தைச் சமர்ப்பிக்கிறோம். அது குறித்து அவர்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறோம்.

சிங்கள மக்களுக்கும் பாதுகாப்பாக வந்த சட்டரீதியான படையைச் சேர்ந்தவர்கள், திரும்பிச் செல்லும் போது ஒன்றுமறியா அப்பாவித் தமிழர்களைத் தாக்குகின்றார்கள். அதனைச் சகிப்படுத்த நியாயமும் சொல்கிறார்கள்.

அவர்கள் செயலும், சொல்லும் சரி என்று ஏற்றுக் கொள்கிறீர்களா? அரசாங்க அதிகாரிகளே! அவற்றை உங்களால் தவிர்க்கத்தான் முடியுமா?

சிங்கள மக்களைப் போலவே தமிழ் மக்களுக்கும் பாதுகாப்பு அளிப்பது உங்கள் கடமை என்று சட்டரீதியான, உத்தியோகபூர்வமான ஆயுதப்படையினருக்கு புத்தி கூறுவீர்களா? ஆயுதப்படையினர் அதனை உணரச் செய்விக்க முடியுமா?

உங்களால் நிச்சயம் முடியாது. ஆயுதப் படையினர் பல சந்தர்ப்பங்களில் ஒழுங்குக் கட்டுப்பாட்டை மீறி நடந்தனர் என்பதை ஜனாதிபதி முதற்கொண்டு முக்கூட்டுத் தளபதி வரை ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

அவ்வாறாயின் இலங்கையின் ஆயுதப் படைகளைத் தமிழ் மக்கள் தமது எதிரிகள் என்று நினைக்காமல் எப்படி பாதுகாப்புத் தருபவர்கள் என்று எண்ணமுடியும்? இலங்கை என்று சொல்லப்படுகின்ற ஒரு நாட்டில் அதிலாமல் வேறு ஒரு நாட்டில் தாம் வாழ்கிறார்கள் என்ற உணர்வு தமிழ் மக்களுக்கு உண்டாவதை எப்படித் தடுக்க முடியும்?

சற்றே நிதானித்துப் பாருங்கள். அரசாங்க உயர் பீடத்தினரே, சிங்களப் பேரினவாதிகளே!

முதலில் எந்தச் செயலையும், சொல்லையும் நிறுத்த வேண்டும் என்பது நிச்சயம் புரியும்.

சாம்பல்தீவு தடைப்பிரதேசம்

திருமலை, அக். 10

திருகோணமலை மாவட்டத்தொகுதியில் சாம்பல்தீவு, சல்லிக் கிராமங்களில் இன்னும் தடை செய்யப்பட்ட பகுதிகளாகவே இருக்கின்றன

திருமலையில் இருந்து நிலாவெளிக்கு மக்கள் சென்று வர அனுமதிக்கப்படுகின்றார்கள்

சாம்பல்தீவு, சல்லிக் கிராமங்களுக்குச் சென்று வர அனுமதி வழங்கப்படவில்லை.

சாம்பல்தீவில் கிறிஸ்த தேவாலயத்தில் உள்ள அகதிகளை திருமலை பிரசைகள் குழு உறுப்பினர்கள் சென்று பார்வையிட மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது

(இ-எ-150)

வங்கத்தில் வெள்ளம்

கல்கத்தா, அக். 9

மேற்கு வங்காளத்தில் வெள்ள நிலைமை மிகவும் மோசமடைந்து வருகின்றது.

சூர்யாபூர் அணையிலிருந்து நிமிடத்திற்கு ஒரு லட்சம் கன அடி தண்ணீர் வெளியேறுவதால் இந்த அபாய நிலைமை தோன்றியது

நாகாலாந்து மணிப்புரி பகுதிகளும் பலத்த மழைச் சேதத்திற்கு உள்ளாகியது. (ஒ)

பஞ்சாப்பில் விரக்தியாளர் புதுமுயற்சி

சண்டிகார், அக் 9

பஞ்சாபில் பயங்கரவாதத்துக்கு எதிரான தொடர்ச்சியான போராட்டத்தில் விரக்தியுற்றவர்கள் கண்ணிவெடித்தலில் ஈடுபடுகின்றார்கள்

பஞ்சாபில் இயல்பான நிலைமை விரைவில் ஏற்படும் எனவும் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் ஒரு சவாலாக பஞ்சாப் பாதுகாப்பு பிரிவினர் கவனித்து வருகின்றார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளன (ஒ)

வல்லரசு தலைவர்களின் நாளைய சந்திப்பு யுத்த பீதிக்கு முடிவுகட்டுமா?

ராஜீவ் நம்பிக்கை

புதுடில்லி, அக். 9

அமெரிக்க ஜனாதிபதி றேகனுக்கும் ரஷ்ய ஜனாதிபதி கோர்ப்பச்சேவிற்கு மிடையே நடைபெறவிருக்கும் சந்திப்புக் கூட்டத்தில் கணிசமான முடிவுகளை எதிர்பார்ப்பதாக பிரதமர் ராஜீவ் தெரிவித்தார்

அணுஆயுதப் போர் ஒன்றில் வெற்றிகாணவே முடியாது. எனவே அத்தகைய போர் அணுவியமானது எனக் கடந்த வருடம் ஜெனீவாவில் வெளியிடப்பட்ட பொதுவான கருத்தை வல்லரசுத் தலைவர்களும் வளர்க்க வேண்டியது முக்கியமானது.

அணுஆயுத சோதனைகள் சம்பந்தமாக ரஷ்யா நடந்து கொள்வது பாராட்டுக்குரியது

மூன்றாவது தடவையாகவும் அச்சோதனைகளை ரஷ்யா நிறுத்தியுள்ளது

அமெரிக்காவிடமிருந்தும் இதர அணுஆயுத நாடுகளிலிருந்தும் இதே மாதிரியான நடவடிக்கையை உலகம் எதிர்பார்க்கின்றது.

இவ்வாறு பிரதமர் ராஜீவ் தெரிவித்தார் (ஒ)

ஆர்ப்பாட்டம்

பொன், அக் 9

மேற்கு ஜெர்மனியில் புதிய அணு ஆலை இயக்கப்படுவதை எதிர்த்து சுமார் இருபதினாயிரம் பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இரம்பேக் நகரில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது ஆர்ப்பாட்டக் காரர் மீது பல கடைகளை குறைவடிய தாக்கவும் முயன்றனர். இரண்டு வகுப்புகள் கொளுத்தப்பட்டதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ)

நிதி உதவியை நிறுத்தும்படி கோரிக்கை

ரொரொண்டோ, அக். 9

மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் இலங்கைக்கு கனேடிய சர்வதேச அபிவிருத்தி ஏஜன்சி தொடர்ந்து நிதி உதவிசெய்யக் கூடாது

கனடாவில் இருந்து வெளிவரும் 'ரொறன்டோசன்' என்ற ஆங்கில நாளிதழ் மேற்கண்டவாறு கூறியுள்ளது

அப் பத்திரிகையின் செப்டம்பர் 22 ஆம் திகதி இதழில் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கத்தில் மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

'குழப்பம் நிலவுகிறது' என்ற தலைப்பில் இத்தலையங்கம் எழுதப்பட்டிருந்தது (ஒ)

ஜப்பான் விஜயம்

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்று வெள்ளிக்கிழமை ஜப்பான் வருவார். (ஒ)

உலகில்

பழி நடவடிக்கை

அங்கோலாவில் யூனிடா கிளர்ச்சியாளர்கள் 56 அரச துருப்புகளை கொன்றுள்ளதாகவும் அதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக அரச துருப்புகள் கிளர்ச்சியாளர் பகுதியில் விமான குண்டுவீச்சு மூலம் 62 பொதுமக்களை பலிவாங்கியதுடன் மேலும் 62 பேரை காயப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அகதிகளை ஆதரிக்குக

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவன அதிகாரியொருவர் தொழில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் மூன்றும் மண்டல நாடுகளைச் சேர்ந்த அகதிகளை கல்கத் குடியேற்றக் காரர்களாகக் கருதாமல் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

கிளர்ச்சியாளர் சரண்

சுமார் 500 ஆப்கான் கிளர்ச்சியாளர்கள் தங்கு நகரான காபூரில் பாதுகாப்பு அதிகாரிகளிடம் சரணடைந்தனர்

கம்பள உயர்வு

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதியின் சம்பளம் 5 ஆயிரம் டாலர்களில் இருந்து 15 ஆயிரம் டாலர்களாக அதிகரிக்கப்படும்.

இஸ்ரவேலும் தடை

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான பொருளாதார தடைக்கு விதிவிலக்கு பற்றி இஸ்ரவேல் ஆலோசித்து வருகின்றது.

நிபந்தனை

லெபனானில் நடுத்தர வைக்கப்பட்டிருக்கும் மூன்று பிரெஞ்சுக்காரரை விடுவிப்பதாயின் 17 அரபு கைதிகளும் ஒவ்வொரு தடவை விடுதலை செய்யப்படவேண்டும் என இஸ்லாமிய லிவாகுழு கோரியுள்ளது.

வியட்நாம் ஆர்வம்

ஆசிய நாடுகளின் வளர்ச்சியில் அதிக ஆர்வம் காட்டிவரும் அமெரிக்காவுடன் நேச உறவுகளை உருவாக்குவதில் ஆர்வமுள்ளதாக வியட்நாம் அறிவித்தது (ஒ)

வியட்நாமில் ஏற்பாடு

பிரெஞ்சு வெளிநாட்டமைச்சர் வியட்நாம் விஜயம் மேற்கொண்டுள்ளார் அப் பகுதியில் போரினால் மாண்டு போன 25,000 பிரெஞ்சு துருப்புகளின் சமாதிக்கும் விஜயம் மேற்கொள்ளவிருக்கும் அவர் உருக்குலையாத எலும்பு மீதங்களை தமது தேசத்துக்கு எடுத்துச் செல்ல ஆவன செய்வார்.

எள், எண்ணெய் எரித்து பாவ நீக்கம் செய்வோம்

நாளை புரட்டாதி கடைசிச்சனி

புரட்டாதி பிறந்து விட்டால் முதலிலே எமது நினைவில் வருவது சனிக்கிழமை விரதமாகும். சனீஸ்வரனிடத்திலே அனைவருக்கும் அச்ச உணர்வும் அதே நேரத்தில் அக்கிரகத்துக்கு பிரீதி செய்து துன்பத்தைத் தொலைக்க வேண்டுமென்ற ஆவலும் ஏற்படுகிறது

"கஷ்டப்பட்டவனுக்கு அட்டமத்தில் சனி; ஒடிப் போவதற்கு ஒன்பதிற்கு" என்பர், இராவணசரிதம், நளமகாராஜன் வர் என்பதும் உரையாகு. சிவபூசை, சிவத்தியானம், சிவநாமம், சிவத்தொண்டு, சிவன்கோயில் ஆகியவற்றைப் போற்றி வழிபடுவோர் நித்தியோதயர்க்கு காட்டுகிறது இவ் ஆலயத்தில் வடமேற்கு மூலையில் உட்பிரகாரத்தில் சனீஸ்வரனுக்குப் பிரதிஷ்டை சந்நிதி உண்டு புரட்டாதிச் சனிக்கிழமைகள் தோறும் விசேட பூசைகள் அர்ச்சனைகள் எள்ளுப் பொட்டலம் எரித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம்.

ஒன்பது கிரகங்களிலும் மிகப்பலம் வாய்ந்தது சனீஸ்வரன் இவர் ஒன்றான தோற்றமும், ஒரு முகம் நான்கு கைகளும் உடையவர். அம்பு, வில், வாள் வரதம் ஏந்திய வர் நீலமேனியுடைய இவர் சடைமுடியுடன் காட்சி தருவார். சரிய ஆடை, கருஞ்சந்தனம், நீலமலர் மாலை பூணுவர்.

இவரது உலோகம், இரும்பு, இரத்தினம் நீலம்: தானியம் எள்; புஷ்பம்; கருநீலமலர், சமித்து வன்னி; சுவை; கசப்பு வாகனம் காகம்; மலை கும்பராசிகளுக்கு அதிபதியாக விளங்குபவர் ஆயுள் காரகன் எனப் போற்றப்படுவார்

ஆவனன்றி ஓரணவும் அசையாது என்பது பழமொழி. ஆகவே இறைவன் இயக்க அந்த ஆணையாலேயே நவக்கிரகங்களும் இயங்குகின்றன அகில உலகங்களும் முதல்வனாகிய பரமேஸ்வரனை வழிபடுவதால் நவக்கிரகங்களின் பிரீதியடைந்து தீமையை விலக்கி நன்மையை விளைவிக்கின்றன என்பது சைவநெறி கணிர்த்தும் உண்மையாகும் கோளறு பதிகமும் இவ்வுண்மையை உணர்த்துகிறது.

ஞானக்கதிர்

இவர் பார்வை நலிவையோ, துன்பத்தையோ ஏற்படுத்தாது.

புண்ணிய தீர்த்தங்களில் முழுகிச் சிவஷ

காவேரி யோகநாதன்

சரிதம் என்பவை இந்த உண்மைகளைக் காட்டுவன.

கண் பார்வையை இழந்த நிலையில் கந்தரமூர்த்தி நாயனார் "மந்தநிற புத்கதோர் சனி எனக்கானுட" என்று பாடினார். ஆனால் சனி பகவானுக்கு இயற்கையான சாந்த குணத்தை மாற்றிவிட்டது, ஒரு சாபமாகும். அதாவது 'கமத பார்வை வடுமிடம் எல்லாம் கருகிப் போவதாக' என்று மனிவியால் சாபம் பெற்ற பாடு செய்து ஆர்ச்சனை புரிந்து எள் எண்ணெய்த் தீபமேற்றி எள் கலந்த அன்னத்தைக் காகத்திற்குப் படைத்து சனிக்கிழமை விரதத்தை நிறைவேற்றுகின்றனர். தான தருமம், வழிபாடு, ஆசாரம், ஒழுக்கம் உள்ள இடங்களில் கலியின் தொல்லை ஏற்படாது.

ஒருசமயம் பிராரத்த வினையினால் தொல்லை அனுபவிக்க நேர்ந்தும் கையில் பரவமாகிய கறுப்புத்துணியிலே எள்ளை போட்டுப் பொட்டலமாகி சனி பகவானுடைய கருணையாகிய நல்லெண்ணெய்க்குள் அமிழ்ந்தி எரிப்பதால் தோஷ பரிகாரமும் பாவ நீக்கமும் விமோசனமும் கிடைக்கும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றினாலும் சிறப்புப்பெற்ற தலம் நகுலேச்வரம்.

மிகப் பழங்காலத்தொட்டே புரட்டாதிச் சனிக்கிழமை விரதமனுட்டிப்போர் இத்தலத்திற்கு வருகை தந்து கீழேயுள்ள புண்ணிய தீர்த்தமாகிய சிவஞானபாடு ஆற்றி எள் எண்ணெய் எரித்துச் செல்வமாக நகுலகிரிப் புராணம் சிறப்பாக

ஷப்ரு ஆதரவில் சமய அறிவுப் போட்டி நல்லை ஆதீனம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், அக். 10

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தால் 'ஷ்ப்ரு' நிறுவனத்தின் ஆதரவில் நடத்தப்படும் சமய அறிவுப் போட்டிகள் 13 ஆம் திகதி திங்கள் முதல் 16 ஆம் திகதி வியாழன் வரை நிலமும் பி.ப 2.30 மணி தொடக்கம் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

பெரியபுராண வசனத்தைப் பொருளாகக் கொண்டு பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் இந்த விஞ்ஞாவினாப் போட்டியில் யாழ்மாநகரசபை எல்லைக்கு வெளியேயுள்ள பாடசாலைகளுக்கான இடைநிலைத் தேர்வு நிகழ்வு வியாழமுமாகும்!—

யாழ் மாநகரசபை எல்லைக்குள் உள்ள பாடசாலைகளுக்கான இடைநிலைத் தேர்வு செவ்வாய்க்கிழமையும் நடைபெறும்.

வெற்றியீட்டும் பாடசாலைகளுக்கிடையேயான தேர்வுகள் புதன், வியாழக்கிழமைகளிலும்-

இறுதித் தேர்வு 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை — பூரணைநாள்— காலை 10 மணிக்கு நடைபெறும் அன்றைய தினமே பரிசில்கள் வழங்கப்படும்.

பாடசாலைகளுக்கு முதல் இடம்பெறும் பாடசாலைக்கு வெற்றி கேடயமும்—

முதல் மூன்று மாணவர்களுக்கு பதக்கங்கள் ஆகிய பரிசில்களும் —

நிறைமம் பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.(உ)

இளையதம்பி வித்தியாலயத்தில்

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் கண்மகள் விழா இன்று காலை 9 மணிக்கு நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறுகின்றன.

சைவநெறிக் கழகத்தலைவரும் வட்டாரக் கல்வி அலுவலகருமாகிய திரு க மகேசன் சிறப்புரையாற்றுவர்.

மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் ஆசிரியை செல்வி ரா. ரஞ்ஜனி அவர்களின் இன்னிசை விருந்தும் நடைபெறும். (உ)

நவராத்திரி நிகழ்ச்சிகள்

இருபாலையில்

யாழ்ப்பாணம், அக் 10

இருபாலை விநாயகர் வீதி நரசிங்க வைரவர் ஆலயத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி நவராத்திரி விழா கொண்டாடப்பட உள்ளது.

விசேஷ பூசைகளும் சொற்பொழிவுகளும் நவராத்திரி நிகழ்ச்சியின் முக்கிய அம்சங்களாக இருக்கும் (இ-10)

சங்குவேலியில்

சங்குவேலி தமிழ்க் கலவன் பாடசாலையில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி அளவில் நவராத்திரி விழா நடைபெறும்.

சிறப்பு நிகழ்ச்சியாக இணுவில் சோதிலிங்க சுவாமிகள் உரை நிகழ்த்துவார் (இ-10)

கைதடியில்

கைதடி நுணாவில் கிராம அபிவிருத்திச் சங்கமும், மாதர் அபிவிருத்திச் சங்கமும் இணைந்து எதிர்வரும் 12 ஆம் திகதி போட்டி நிகழ்ச்சிகளுடன் கூடிய நவராத்திரி விழாவை கொண்டாட உள்ளன.

நவராத்திரி தினமான விஜயதசமி நிகழ்ச்சி நடைபெறும் (ஆ)

அறவழிகுழுவினர் ஏற்பாடு

சாவகச்சேரி, அக் 10

அறவழிப் போராட்டக் குழுவினர் தமது பணி மனையில் நவராத்திரி விழாவை பக்தி சிரத்தையுடன் நடத்தி வருகின்றனர்

விஜயதசமி தினத்தன்று வெளிநாட்டு ஆர்மோனியம் நாதஸ்வரம் முதலையா அவர்கள் அருளுரையை வழங்குவார்.

வித்தியாரம்பத்துடன் கண்ணிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது. (உ-31)

இத்தாவிலில்

பண்டி, இத்தாவில் வேம்பொடுகேணி சரஸ்வதி சன சமூக நிலையத்தின் கலை விழா சனசமூக நிலைய அரங்கில் இன்று மாலை ஐந்து மணிக்கு செல்வன் க. சந்தானம் தலைமையில் நடைபெறும்

இவிநொச்சி அரசாங்க அதிபர் திரு ஜெயசெந்தில்நாதன் பிரதம விருந்தினராகவும் —

கலை உதவி அரசாங்க அதிபர் திரு எக். கந்தசாமி, பண்டி கொத்தணி அதிபர் திரு பொ. செல்லையா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்

இரவு நிகழ்ச்சிகள், சமூக, சரித்திர, நகைச்சுவை நாடகங்கள், விவாத அரங்கு, தாலாட்டு சிந்து ஆகியவை கண்விழாவில் இடம் பெறும். (உ)

திருவள்ளுவர் நிலையத்தில்

யாழ்ப்பாணம் மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் நவராத்திரி விழா நாளை சனிக்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெறும். (உ)

தேசிய வீடமைப்பு ஊழியரின் ஏற்பாடு

தேசிய வீடமைப்பு அதிகாரசபை யாழ் மாவட்ட ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணிக்கு நவராத்திரி பூசை யாழ் அலுவலகத்தில் நடைபெறும்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் திரு க. பூ முருகையா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகிப்பார். (உ)

நவராத்திரி சிறப்பம்சம்

கலைகள் பல அருள்வாய் போற்றி

வீணையின் ஒலியில் உறைவாய் போற்றி
வித்திலாதானாய் அருள்வாய் போற்றி
விக்கினங்கள் தீர்த்தருளும் அம்மா போற்றி
விருப்போடு கல்வியளிப்பாய் போற்றி.

பத்திசெய பாரிருவரலாய் போற்றி
பரஞ்சோதி வடிவான சக்தியே போற்றி
பார்புகழுநின்ற நிறைவதியே போற்றி
பாவிகளை கல்விதரும் வித்தினியே போற்றி.

கலைகள் பல அருள்வாய் போற்றி
கருணையுள்ளம் கொண்ட காரணி போற்றி
கற்றவர் போற்றிடும் கற்பகமே போற்றி
கலைமகள் என்னும் திருவே போற்றி.

— கு. கிருஷ்ணேஸ்வரன்



பொன்மொழி

ஞானம்:
புறங்குன்றி கண்டனைய ரேனும், அகங்குன்றி மூக்கிற் கரியார் உடைத்து.

பொருள்:
புறத்தில் குன்றிமணியைப் போல் செம்மையான வராயிருக்கிறவர்களாயினும் [illegible] மூக்கில் கரிய [illegible] உடையவர் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெந்த முறையில் வீடியோ படம் எடுப்பதற்கு
வீடியோ விஹொன்ஸ்
தயாரிப்பாளர் கி இராஜராஜனின் கலை நுணுக்க ஒளிப்பதிவில் உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்துகொள்ளுங்கள்
அரசடி லேன்,
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

உதயன்

10- 10 - 1986 வெள்ளிக்கிழமை

For quality Video Filming
VIDEO VIHONS
RAJARAJHAN'S effects and Techniques in videography gives great pleasure for all your memorable events at home or else.
Arasady Lane,
Kondavil East,
Kondavil.

நவராத்திரி நிகழ்ச்சிகள்

வின்ஸரில்

யாழ்ப்பாணம், அக். 10
தமிழர் கலாசார அலுவலில் 'நவராத்திரி' விசேட கலை நிகழ்ச்சிகளும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மிற்பகல் 5 மணிக்கு யாழ் வின்ஸர் கலையரங்கில் நடைபெறும்.
கலைஞர் மேல் ஆனந்தன் நாடகக் குழுமம் வழங்கும் நிருத்த நிருத்திய நாட்டியம் (குலமகள் பஸ்மாசுரன் 77)
இசைபாரங்கு (கலைமாமணி செல்வி வர்ணலாதேவி வழங்கும் விடுதலைக்கீதங்கள்),
விக்கிரை வேந்தன் சரிநாவின் ஸ்ரீதேவி விக்கி வசந்குமு வழங்கும் யாழ் சாவி சபதம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறும். (உ - எ)

பன்னாலையில்

யாழ்ப்பாணம், அக்.10
பன்னாலை கலைச் சனசமூக நிலையத்தில் ஒரு டாந்த வாணிவிழா இன்று நிலைய அரங்கில் நடைபெற உள்ளது.
திரு. ச. கப்பிரமணிய சுவாமிதலையில் நடைபெறும் இவ்விழாவில் நடு வை இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.
நடனம், நாட்டியம், பாட்டு, பட்டிமன்றம் என்பன கலை நிகழ்ச்சிகளாக இடம்பெறும். (உ-5)

சுங்கத் திணைக்களத்தில்

யாழ்ப்பாணம், அக். 10
யாழ் மாவட்ட சுங்கத் திணைக்கள நவராத்திரி விழா இன்று காலை திணைக்கள அலுவலகத்தில் உதவி கலெக்டர் திரு எஸ். கணநாதனிங்கம் தலைமையில் நடைபெறும்.
ஆதிமஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா ஆகிய நவராத்திரி பாராணைப் பிரதிகள் இலவசமாக இவ்விழாவில் விநியோகிக்கப்படவுள்ளது.
செல்வி தனலக்ஷ்மி இராமச்சந்திரா பக்திப் பாடல்களைப் பாடுவார் (உ-9)

ஆஸ்பத்திரியில்

யாழ்- ஆஸ்பத்திரி வைரவர் ஆலய புரட்டாதி பரிபாலன சபையின் கீழ் நவராத்திரி விழாக்கள் நற்பொழுது நடைபெற்று வருகின்றன.
ஞாயிற்றுக்கிழமை நாள் விநியோகப் பரிசுகளின் விசேட திருவிழாவும் நடைபெற உள்ளது (உ-10)

1987 ஆம் ஆண்டுக்கான நிதி

யாழ் அபிவிருத்திசபைக்கு 2 கோடி 50 லட்சம் ரூபா

உள்ளூராட்சி அமைச்சு ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், அக். 10
யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைக்கென உள்ளூராட்சி அமைச்சு நிதிசேரி மூலம் 250 லட்சம் ரூபாவை 1987 ம் ஆண்டுக்கென ஒதுக்கியுள்ளது.
இப்பணத்தை உள்ளூராட்சி, கல்வி, மின்பிடி, விவசாயம், பெருந்தெருக்கள், இளைஞர் சேவைகள், கூட்டுறவு, சுகாதாரத் திணைக்களங்கள் கட்பட 15 திணைக்களங்களுக்கு யாழ் அபிவிருத்திச்சபை பகிர்ந்து செய்யும்.
ஒவ்வொரு திணைக்களங்களின் 87 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்களை ஆராய்வதற்கென தனித்தனி ஆலோசனைக் கூட்டங்களை அபிவிருத்திச்சபை உதவிச் செயலாளர் திரு. எஸ் பரமநாதன் ஒழுங்கு செய்துள்ளார். (உ-5)

மனைவி கொலை வழக்கில்

$3\frac{1}{2}$ ஆண்டுகளுக்குப் பின் கணவனுக்கு சரீரப் பிணை

யாழ்ப்பாணம், அக் 10
மனைவியைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் மூன்றரை ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கணவனை ஐயாயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல யாழ் மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.
அண்மையில் இவ் வழக்கு யாழ்மேல் நீதிமன்ற நீதிபதி திரு. சி. குலரத்தினம் குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.
மயிலிட்டியைச்சேர்ந்த நாகலிங்கம் விஜயரட்னம் என்பவரே எதிரி. மனைவி ரத்தினவாத்தியை 22-3-1983இல் வில்லுக் கத்தியால் குத்திக்கொலை செய்ததாக இவர்மீது குற்றஞ் சுமத்தி காங்கேசன்துறைப் பொலீஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
யாழ். சிறைச்சாலை மூடப்பட்டுள்ளதால் எதிரி நீர்கொழும்புச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தார்.
எதிரியைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி சட்டத்தரணி களைக் மனோகரன் விண்ணப்பித்தார்.
கீழ்க் கோர்ட்டில் விசாரணை நடைபெறுமைக்கு அரசும் பொலீஸாரும் தான் காரணம்; எதிரி அல்ல—இப்படி திரு. களைக் மனோகரன் விண்ணப்பத்துக்கு ஆதரவாக தெரிவித்தார்.
மேல் நீதிமன்ற நீதிபதி எதிரியை உறவினர் ஒருவரிடம் ஐயாயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்வதாக உத்தரவிட்டார்.
அரச தரப்பில் சட்டத்தரணி திரு ஜ ஞானாசுந்தர் ஆஜராகினார். (இ-எ)

மலையக ஆசிரியர்களின்...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)
தரம் மிகக் குறைந்த பிரதேசமாக மலையகம் ஆரம்பகாலம் தொட்டு இருந்து வருகிறது.
மலையகத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்விவசதி முதலாளி தோட்டங்களில் தொழிலாளர் பஞ்சம் ஏற்பட்டுவிடும் என்ற நோக்குடனேயே பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சி செயல்பட்டது. அதே எண்ணத்துடன் ஸ்ரீலங்கா ஆட்சியும் செயல்படுகின்றது.
இதனால் தோட்டப் பாடசாலைகளை மூடியும் தமிழர்களுக்கு மலையக மாணவர் சென்று படிப்பதைத் தடுத்தும் வருகின்றது.
இவற்றின் உச்சக்கட்டமாக மலையத்தில் படிப்பிக்கும் ஆசிரியர்களை 'பயங்கரவாதிகள்' என்று பட்டம் சூட்டி மலையகத்திலிருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் அரச ஈடுபட்டு வருகின்றது.
கடந்த சில நாள்களுக்கு முன்னர் மலையத்தில் கைது செய்யப்பட்ட ஆசிரியரை விடுதலை செய்யுமாறு மாணவர்களுடன் இணைந்து ஆசிரியர்களும் பெற்றோர்களும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் ஈடுபட்டிருப்பது ஈழப்போராட்டத்தில் முக்கிய நிகழ்வாகும்.
இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

மோதத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
விட்டு எதிரணியுடன் நேருக்கு நேர் போர் செய்வாருங்கள்.
✶ இதுவரை எத்தனையோர் தமிழ், சிங்களப் பொது மக்கள் உயிர் முந்துவிட்டார்கள்
✶ இதுவரை நீங்கள் பெற்ற வெற்றிதான் என்ன?
✶ தென்னிந்தியாவில் உள்ள உங்கள் தலையையும் அரசியல்வாதிகளையும் நீங்கள் இன்னும் நம்புகின்றீர்களா?
✶ கடந்த 27 ஆம் திகதி 'சற்றர்டே ரிவியூ' பத்திரிகையில் உள்ள உங்கள் தலைவரின் பேச்சை வாசியுங்கள் (உ)

சண்டிலிப்பாயில்

நாட்டிய ஆசிரியை செல்வி. பி மாலினியின் மாணவிகள் பங்கு பற்றும் கலைவாணி நாட்டிய நிகழ்ச்சி நாளை காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.
செல்வி. ரேணுகா கதிர்காமநாதன் நடன நிகழ்ச்சி உட்பட பல நாட்டிய நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற விருக்கின்றன. (உ)

(3-ம் பக்கமும் பார்க்க)

இன்று இறுதிநாள்

யாழ்ப்பாணம், அக் 10
புனர்வாழ்வு அமைப்பினால் விநியோகிக்கப்பட்ட பாதிக்கப்பட்டோருக்கான விண்ணப்பப் படிவங்களை நிரப்பி மீளக் கையளிப்பதற்கான இறுதித்தினம் இன்றாகும்.
பாதிக்கப்பட்டவர்கள் தாமதமின்றி ராமகிருஷ்ண சேவாசங்கத்திடம் விண்ணப்பங்களை ஒப்படைக்கு மாறு ஏற்கனவே நிட்டமிடக் உதவிப் பணிப்பாளர் பத்திரிகை வாயிலாக கேட்டிருந்தார்.
இதுவரை 75 ஆயிரம் விண்ணப்பங்கள் உதவி அரச அதிபர் அலுவலகங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளன (உ)

சாவகச்சேரியில் பொருள்காட்சி

யாழ்ப்பாணம், அக் 10
மறுமலர்ச்சிக் கழகமும் மாணவர் முன்னணியும் இணைந்து நடத்தும் "எம் மக்களின் எதிர்காலம் நோக்கி" என்ற தலைப்பிலான பொருள்காட்சி சாவகச்சேரி பஸ்நிலையம் முன்பாக இன்றும் 16 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது
காலை 8 30 மணிமுதல் இரவு 8 மணிவரை தினமும் இப்பொருள்காட்சி நடைபெறும் (உ-எ)

பூரண சுதந்திரம் கிடைக்கும் வரை

பின்வாங்க மாட்டார்கள்

மாவிப்பாய், அக். 10
பூரண சுதந்திரம் கிடைக்கும்வரை ஈழ மக்கள் தாம்கொண்ட இலட்சியத்தில் நின்றும் பின் வாங்க மாட்டார்கள்.
உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் இளைஞர் நலன் வேண்டி நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் வித்தியாசாலை அதிபர் திரு வை யோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.
வித்தியாசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அதிபர் தலைமையில் கோளாறு பதிகம் பாடி ஒரு மணி நேர பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.
ஆசிரியர் திரு. கே செல்வக்குமரன் பேசுகையில், ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் உலகெங்கும் கொண்டாடப்படும் மனித உரிமைகள் தினம் இலங்கையிலும் கொண்டாடப்பட்டாலும், இலங்கை வாழ் மக்களின் ஒரு சாராருக்கு உரிமைகள் வழங்கப்படாது அவர்கள் கொண்டாட்டத்தையே இழிவு படுத்துவதாக அமைகிறது என்றார்.
அதிபர் திரு வி. யோகேஸ்வரன் ஆசிரியர் திரு. எஸ். இராசரத்னா, ஆசிரியை திருமதி அ. கருத்திரராசா, ஆசிரியை திருமதி ஐ. எஸ். சண்முகாதேவி செல்வி து ரீஷா ஆகியோரும் பிரார்த்தனை உரை வழங்கினர். (இ-90)

நாதஸ்வர---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டு உரையாற்றுவர்
நாதஸ்வர, தவில் கலைகளைப் பயில்வதற்குச் சுமார் 50 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். பாரம்பரியமாக ஆர்வங்கொண்ட குடும்பங்களைச் சேராதவர்களும் அவர்களில் அடங்குவர்
பயிற்சிக்கலூரிக்கென 6 தவில்களும் 6 நாதஸ்வரங்களும் கொடுத்துள்ளன. இவற்றில் சில ஆண்டுகளிப்புச் செய்தவை மிகுதி கலாசாரப் பேரவையினால் கொள்வனவு செய்யப்பட்டவை
பயிற்சிக் கலூரிக்கு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் தனியான பகுதியைக் கொடுத்துச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஒதுக்கிக் கொடுத்துள்ளார். (அ-உ-எ)

வயாவிளானில் வீடுகள் தொடர்ந்து தகர்ப்பு

யாழ்ப்பாணம், அக் 10
வயாவிளான் பகுதியில் தொடர்ந்தும் வீடுகள் இராணுவத்தினரால் தகர்க்கப்பட்டுவருகின்றன.
மினிமுகாமுக்கும் வயாவிளான் சந்திக்கும் இடைப்பட்ட பல வீதியில் மேற்குப்பக்கத்து வீடுகளே இவ்விதம் உடைக்கப்படுகின்றன.
உடைக்கப்படாத வீடுகளில் படையினர் தங்கி இருப்பதாகவும் தெரிய வருகிறது
பலாலி வீதியில் பல இடங்களில் மண்மூடைகள் அடுக்கப்பட்டுள்ளன.
இராணுவத் தளபதியின் அனுமதியுடன் தமது வீடுகளை பார்வையிடச் சென்றவர்களிடம் வீட்டுத் தளபாடங்களை அப்புறப்படுத்தவேண்டாம் என சிப்பாய்கள் கேட்டுக் கொண்டனராம்.
தினமும் தொடர்ந்து ஒன்றுக்கு சந்தேகங்கள் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயப் பக்கமிருந்து கேட்டவண்ணம் உள்ளன.
வயாவிளான் பலாலி வீதியிலுள்ள வீட்டுச் சொந்தக்காரர்கள் தமது வீடுகள் பற்றிய உண்மை நிலை அறிய யாழ் அரச அதிபரிடம் படையெடுத்து வருகின்றனர். (உ-5)

இலங்கைத் தமிழ் இளைஞர் விவகாரம்:

பயங்கரவாத தடுப்புக்கு இந்தியா தடையாம்

பாகிஸ்தான் குற்றச்சாட்டு

இஸ்லாமபாத், அக். 9
இந்திய முகாம்களில் இருக்கும் தமிழ் இளைஞர்களை தீவிரவாதிகள் என்று கூறிக்கொள்ள இந்திய அரசு விரும்பவில்லை. அதன் மூலம் பயங்கரவாதத் தடுப்பு முயற்சிகளை எதிராக இந்தியா செயற்படுகிறது
இப்படி பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சுப் பேச்சாளர் ஒருவர் குற்றம் சாட்டினார்
இங்கு நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் சம்பந்தப்பட்ட பாகிஸ்தான் பேச்சாளர் மேலும் சொன்னதாவது
தமிழ் இளைஞர்களை தீவிரவாதிகள் என்ற கண்ணோட்டத்துடன் ஏனைய நாடுகள் கணிப்பதை தவிர்த்தால் கொண்டுள்ள கொள்கையை இந்தியா முயல்கின்றது
'சார்க்'கின் தாபனம் எடுக்கும் சர்வதேச பயங்கரவாத எதிர்ப்புமுயற்சிக்கு இந்தியாவின் இச் செயல் பெரும் தடையாக உள்ளது
பயங்கரவாத வரைவிலக்கணம் தொடர்பாக இந்தியா கொடுத்துள்ள கருத்து விளக்கம் எமக்கு உடன்பாடானதாக இல்லை—
இப்படி பாகிஸ்தான் பேச்சாளர் மேலும் சொன்னார். (உ - ஐ - எ)

அடிக்கடி தரை இறங்கிய ஹெலிகள்

யாழ்ப்பாணம், அக்.10
மண்டைதீவு ராணுவ முகாமில் நேற்று அடிக்கடி ஹெலிகொப்டர்கள் தரையிறங்கிச் சென்றன,
நேற்றுக் காலை முதல் மாலை வரை இரண்டு ஹெலிகொப்டர்கள் மண்டைதீவுக்கும் யாழ்விலும் இடையில் அடிக்கடி பறந்து சென்றன.
ஐந்து நிமிடங்களுக்கு ஒருமுறை இறங்கிச் சென்ற இந்த ஹெலிகொப்டர்களில் இருந்த பாரிய பொதிகளையும் பெட்டிகளும் இறக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.
இங்கிருந்து நேற்று மாலை மண்டைதீவு ராணுவமுகாமில் இருந்த லொறிகளும், ட்ரக்குகளும் கோட்டை முகாம்நோக்கிச் சென்றதாகவும் கூறப்படுகிறது (உ-10)

தமிழ்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
புலிகள் மரணசாசனையை எதிர்க்கின்றன.
பெரும்பாலான தமிழர் அமைப்புகளுடன் இந்தியா, தமிழ்நாடு அரசுகள் மரணசாசனத்தை நிட்டத்தை ஆதரவு நல்கினர், எதிர்க்கும் தீவிரவாத அமைப்புகள்மீது அரசாங்கம் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு கடுப்பாக்கிடுக்கு கொண்டு வரும்.
இப்படி ஜெயவர்த்தனா சொன்னார்.
பிரதமர் உட்பட்ட பல அமைச்சர்கள் கூட்டத்தில் பேசினர்.
சுமார் இரண்டாயிரம் பேர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர், (அ.எ)

கனடா---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பில் உள்ள கனடா தூதரகத்தில் முதலாவது செயலாளரிடம் கேட்கப்பட்டது.
கனடாவில் பத்திரிகைச் சுதந்திரம் உண்டு. இவ் வகையிலும் அச்சுதந்திரம் உண்டு எனவே இலங்கைப் பத்திரிகை எழுதியது குறித்து அபிப்பிராயம் தெரிவிக்க விரும்பவில்லை"—இப்படி அந்த அதிகாரி சொன்னார். (உ - எ)

மணமகள் தேவை

கோண்டாவில் இராமநாதன் சேர்ந்த கடை வைத்திருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. வயது 35 சாதி மதம் அவசியமில்லை வேறு பல குறிப்புகள் எம்மிடம் உண்டு. S.நாகேஸ்வரி, ஞானப்பிட்டிருட், கொக்குவில் மேற்கு.

வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்
தேர்த் திருவிழாவையும் கடைசிப் புரட்டாசிச் சனி உற்சவத்தையும் முன்னிட்டு
11-10-1986 சனிக்கிழமை
மாலை 3·30 மணிக்கு
தேவஸ்தானத்தில் அமைக்கப்பெற்ற விசேட அரங்கில்
இன்னிசை வேந்தர்
பொன் சுந்தரலிங்கம் அவர்கள்
தெய்விக இன்னிசை விருந்து
வழங்குகின்றார்கள்.
திருமால் அடியார்கள் திரண்டு வாரீர்!

உடனடியாக பிரயாண ஒழுங்குகள்
சுவீடன் - நோர்வே
உடன் தொடர்புகொள்ளவும்:
K. திருநாமம் (திரு)
சென். அன்ரனிஸ் லேன்,
4ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலையத்தி, இரண்டாம் ஒழுங்கை [illegible] (பிரைவேட்) லிமிடெட் தொழிலாளர்கள் (பிரைவேட்) லிமிடெட் தொழிலாளர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 10 — 10 — 1986.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 1 Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ60 N86.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org